| வங்கி | ரிப்போ இல. | காலப்பகுதி | | முதலீடு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| | | முதல் | வரை | |
| மக்கள் வங்கி | ஏம்11பீ008780 | 28 ஒக் 11 | 27 சன 12 | 3,047,084.26 |
| மக்கள் வங்கி | எம் 11பீ010123 | 23 நவ 11 | 22 பெப்12 | 3,049,364.38 |
| மொத்தத் தொகை | | | | **6,096,448.64** |

# தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

## நிதிக்கூற்றுக்களின் குறிப்பு

| | 2011 | 2010 |
|---|---|---|
| | ரூபா சதம் | ரூபா சதம் |
| 12. வங்கி மற்றும் காசு மீதிகள் | | |
| இலங்கை வங்கி | 25,292,398.00 | 25,952,505.64 |
| மக்கள் வங்கி | 4,135,767.47 | 7,543,192.56 |
| சில்லறைக் காசு | 4,840.00 | 317.00 |
| சம்பத் வங்கி | 37,119.25 | 37,119.25 |
| | **29,470,124.72** | **33,533,134.45** |

| | 2011 | 2010 |
|---|---|---|
| | ரூபா சதம் | ரூபா சதம் |
| 12.1 இலங்கை வங்கி | | |
| இலங்கை வங்கி யோக் வீதி தலைமை அலுவலகம் | - | - |
| இரத்தினக்கல் அன்பளிப்பு நிதியம் இ.வ. 0000001700 | 148,270.74 | 181,731.47 |
| இலங்கை வங்கி யோக் வீதி க/கு 0000001229 | 19,799,645.84 | 20,982,648.02 |
| தலைமை அலுவலக டொலர் க/கு இல. 8547538 | 571,642.65 | 570,728.36 |
| இரத்தினபுரி இலங்கை வங்கி க/கு 0001016062 | 2,660,459.88 | 1,579,603.70 |
| கெவுடா இரத்தினபுரி இலங்கை வங்கி- 0001015651 | 201,848.92 | 898,610.42 |
| இரத்தினபுரி இரத்தினக்கல் பரிமாற்று நிலையம் இலங்கை வங்கி 0001015894 | 530,172.62 | 43,524.46 |
| மாத்தறை இலங்கை வங்கி க/கு 0001659841 | 1,380,357.35 | 1,695,659.21 |
| | **25,292,398.00** | **25,952,505.64** |

# தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

## நிதிக்கூற்றுக்களின் குறிப்பு

| | 2011 | 2010 |
|---|---|---|
| | ரூபா சதம் | ரூபா சதம் |
| **12.2 மக்கள் வங்கி** | | |
| மக்கள் வங்கி குவீன்ஸ் கிளை க/கு 00331320300024 | 536,904.85 | 34,167.83 |
| மக்கள் வங்கி இரத்தினபுரி க/கு 00881320002665 | 175,161.03 | 2,173,633.18 |
| மக்கள் வங்கி எஹலியகொட க/கு 1620006013 | 1,337,827.65 | 988,556.28 |
| மக்கள் வங்கி நாஉல க/கு 1520001139 | 1,584,113.62 | 2,203,378.21 |
| மக்கள் வங்கி மொனறாகலை க/கு 1520001164 | 501,760.32 | 2,143,457.06 |
| | **4,135,767.47** | **7,543,192.56** |

| | 2011 | 2010 |
|---|---|---|
| | ரூபா சதம் | ரூபா சதம் |
| **12.3 சில்லறைக் காசு** | | |
| சில்லறைக் காசு தலைமை அலுவலகம் | - | - |
| சில்லறைக் காசு கட்டுநிதி போக்குவரத்து | - | - |
| சில்லறைக் காசு கட்டுநிதி தேசிய நுகே பணியகம் | - | - |
| சில்லறைக் காசு கட்டுநிதி இரத்தினபுரி | - | - |
| சில்லறைக் காசு கட்டுநீ அகலியகொட | - | - |
| சில்லறைக் காசு கட்டுநிதி இரத்தினபுரி கெவுடா | - | - |
| சில்லறைக் காசு கட்டுநிதி நாவுல | - | (30.00) |
| சில்லறைக் காசு கட்டுநிதி மொனறாகலை | - | - |
| சில்லறைக் காசு கட்டுநிதி மாத்தறை | - | - |
| சில்லறைக் காசு கட்டுநிதி கட்டுநாயக்கா | 4,840.00 | |
| | | 347.00 |
| | **4,840.00** | **317.00** |

| | 2011 | | 2010 | |
|---|---|---|---|---|
| | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| 12.4 சம்பத் வங்கி | | | | |
| சம்பத் வங்கி க/கு இல.:- டீஎப்சீ/யூஎஸ்டீ/20646 | | 37,119.25 | | 37,119.25 |
| | | 37,119.25 | | 37,119.25 |

**13.** வருமானச் செவலவின மிகை

| | 2011 | 2010 |
|---|---|---|
| கடந்த ஆண்டிற்கு எதிரான கட்டணங்கள் | - | - |
| வருமானச் செலவின மிகை | 12,966,366.88 | 57,606,878.89 |
| முன்னைய ஆண்டு சீராக்கம் | (5,083,757.57) | (13,937,819.45) |
| | **7,882,609.31** | **43,669,059.44** |

# தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

## நிதிக்கூற்றுக்களின் குறிப்பு

| | | 2011 | 2010 |
|---|---|---|---|
| | | ரூபா சதம் | ரூபா சதம் |
| **14** | கடன்கொடுத்தோர் | | |
| | சம்பளக் கட்டுப்பாடு | 100,207.00 | - |
| | பெறுமதி சேர் வரி | 2,528,823.82 | 826,722.46 |
| | புட்பராகம் கொள்வனவிற்கான முற்பணம் | 15,896.26 | 15,896.26 |
| | அவசரக் கடனுக்கான நலன்புரிக் கடன்கள் | - | - |
| | ஏ யூ விட்டாச்சி | 119,289.16 | 119,289.16 |
| | கே வீ ஜயவர்தன | 294,631.00 | 294,631.00 |
| | ஏற்றுமதி ஆணைக்குழு வைப்புக்கள் | 280,000.00 | 280,000.00 |
| | முத்திரைக் கட்டண பெறுவனவுகள் | - | - |
| | கேள்வி வைப்புகள் | 2,828,650.00 | 1,114,500.00 |
| | ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய வட்டி | 41,020.06 | 38,556.67 |
| | இரத்தினக்கல்லியல் செயற்திட்டங்களுக்கான வைப்புக்கள் | 66,456.65 | 66,456.65 |
| | நானாவித கடன்கொடுத்தோர் | 37,782,314.20 | 28,985,470.19 |
| | முற்பண பெறுவனவுகள் | 14,609,577.51 | 11,943,173.93 |
| | செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் | - | - |
| | பதவியணி கடன்பட்டோர் மிகை அறவீடுகள் | - | - |
| | செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கை நிதியம் | - | - |
| | இரத்தினக்கல் ஏற்றுமதி கடன்கொடுத்தோர் | - | 42,430.00 |
| | செலுத்த வேண்டிய பொருளாதார சேவை வரி | (2,239,299.45) | - |
| | 10% பிடிமானப் பணம் | 2,852,939.20 | 2,976,384.09 |
| | ஓப்பந்தக்காரர் கணக்குகள் | - | - |
| | சுனாமி நிதியம் | - | - |
| | இலங்கை கெவுடா நூல் நிதியம் | 60,883.75 | 58,783.75 |
| | இல்லக் காப்புறுதி நிதியம் | - | - |
| | பற்றுச் சீட்டுக்களுக்கான தபால் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் | (450,995.68) | 1,487,579.55 |
| | செலுத்தப்படாத சம்பளங்கள் | - | - |
| | 25% பிடித்து வைத்த இரத்தினக்கல் ஏலவிற்பனை வரி | 6,006,212.20 | 17,696,056.62 |
| | பிடித்து வைத்தல் வரி | - | 339,400.64 |
| | செலுத்த வேண்டிய உழைக்கும் போதே செலுத்தும் வரி | 55,487.96 | 38,294.96 |
| | வாழ்க்கைக் கால அங்கத்துவக் கட்டணங்கள் - டபிள்யூரீசீ | - | - |
| | வாழ்க்கைக் கால அங்கத்துவக் கட்டணங்கள் - இரத்தினபுரி | - | - |
| | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 251,882.46 | 20,541.35 |
| | பெறுமதி சேர் வரி | - | - |
| | கெவுடா கடன்கொடுத்தோர்- காப்புறுதி | 141,677.88 | 177,123.09 |
| | இரத்தினக்கல் ஏற்றுமதி கடன்கொடுத்தோர் | - | 8,000.00 |
| | | 65,345,653.98 | 66,529,290.37 |

# தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபை

## நிதிக்கூற்றுக்களின் குறிப்பு

| | | 2011 | 2010 |
|---|---|---|---|
| | | ரூபா சதம் | ரூபா சதம் |
| **15.** | இரத்தினக்கல்லியல் மற்றும் ஏனைய வைப்புகள் | | |
| | இரத்தினக்கல்லியல் வைப்புகள் - தலைமை அலுவலகம் மற்றும் ஹொரணை | 1,043,000.00 | 810,500.00 |
| | இரத்தினக்கல் குழிகளுக்கான விசேட வைப்புகள் | 5,000.00 | 5,000.00 |
| | ஊழியர் பாதுகாப்பு வைப்புகள் | 49,500.00 | 49,500.00 |
| | காணி முரண்பாட்டு வைப்புக்கள் | 30,100,739.86 | 24,375,615.06 |
| | இரத்தினக்கல் நூதன சாலை நிதியம் | 125,997.00 | 125,997.00 |
| | இரத்தினக்கல் அகழ்வு நலன்புரி நிதியம் | 27,356,497.91 | 27,506,497.91 |
| | ஆய்வுகூட நிதியம் | - | - |
| | மருத்துவ திட்ட நிதியம் | 10,045,047.83 | 10,474,300.13 |
| | ஆபரண அபிவிருத்தி நிதியம் | 17,420,083.00 | 12,358,083.00 |
| | இரத்தினக்கல்லியல் வைப்புகள்- இரத்தினபுரி | 112,053,533.35 | 72,488,116.69 |
| | ஓகேடீ விமலரட்ண | 50,000.00 | 50,000.00 |
| | இரத்தினக்கல்லியல் வைப்புகள் -எஹெலியகொட | 18,145,250.00 | 12,579,250.00 |
| | இரத்தினக்கல்லியல் வைப்புகள் - நாவுல | 9,327,200.00 | 5,569,200.00 |
| | இரத்தினக்கல்லியல் வைப்புகள் - மொனறாகல | 9,501,250.00 | 7,023,250.00 |
| | இரத்தினக்கல்லியல் வைப்புகள் - மாத்தறை | 1,227,000.00 | 930,500.00 |
| | இரத்தினக்கல்லியல் வைப்புகள் - கிரவல் மாற்றம் | 28,000.00 | 28,000.00 |
| | பாதுகாப்பு வைப்புகள் - டபிள்யூரீசீ | 8,008,365.28 | 7,518,661.28 |
| | | **244,486,464.23** | **181,892,471.07** |

# நிதிக்கூற்றுக்களின் குறிப்பு

1. குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள்

1.1 பொது

தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது.

இவ் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் வரலாற்றுச் செலவு அடிப்படை மீது இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக்கூற்றுகளைப் பாதிக்கும் பணவீக்கக் காரணிகளுக்குச் சீராக்கல்கள் எதுவும் செய்யப்படவில்லை. கடந்த ஆண்டில் பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுடன் ஒத்திருக்கின்றன. கணக்கீட்டுக் கொள்கைகளிலான மாற்றங்கள் முறையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

முன்னைய ஆண்டுடன் தொடர்புபட்ட தொகைகளும் கூற்றுக்களும் அவசியம் ஏற்படுகையில் நடப்பாண்டின் வெளிப்படுத்தலுக்கு இணங்கும் வகையில் சீராக்கப்பட்டுள்ளன.

1.2 சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படையும்

1.2.1 ஆதன, இயந்திர மற்றும் பொறித்தொகுதி உபகரணப் பெறுமானத் தேய்வு

சகல ஆதன, இயந்திர மற்றும் பொறித்தொகுதி உபகரணங்களும் கொள்வனவுக் கிரயம் அல்லது நிர்மாணிப்பு அல்லது ஏதேனுமோர் நிகழ்வுடனான மதிப்பீட்டில் பதிவு செய்யப்படுகின்றது. சொத்துக்கள் வரலாற்றுக் கிரயம் அல்லது மீள்மதிப்பீட்டுத் தொகையில் இருந்து நேர்கோட்டு அடிப்படையில் வெவ்வேறு சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலத்திற்கு பதிவழிக்கப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| முழு உடைமையுள்ள கட்டிடங்கள் | 2% | தலா ஒரு ஆண்டிற்கு |
| மோட்டார் வாகனங்கள் | 25% | -மேற்படி- |
| கணனிகள் | 20% | -மேற்படி- |
| தளபாடங்களும் உபகரணங்களும் (ஏனையவை) | 10% | -மேற்படி- |

கொள்வனவு ஆண்டில் பெறுமானத்தேய்வு விதிக்கப்படாததுடன் கைதவிர்க்கப்படும் ஆண்டில் முழு ஆண்டின் பெறுமானத்தேய்வு விதிக்கப்படுகின்றது.

1.2.2 மூலதன நடைமுறை வேலை

(1) கொழும்பு இரத்தினக்கல் நகரம்

கொழும்பு இரத்தினக்கல் நகரத்தின் மொத்த கிரயமான ரூபா 1,475,440.70 ஓர் கைவிடப்பட்ட செயற்திட்டமாக இனங்காணப்பட்டுள்ளது.

#### 1.2.3 இரத்தினக்கல் கண்காட்சி

இரத்தினக்கல் கண்காட்சியின் பெறுமதி, ஐந்தொகையில் இரத்தினக்கற்களின் மீள்பெறுமானம் மதிப்பிடப்பட்ட தொகையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

#### 1.2.4 பொருட்பட்டியல்

பொருட்பட்டியல்கள் கிரயம் அல்லது தேறிய கைக்கெட்டும் பெறுமதியில் எது குறைவானதோ அப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளது.

#### 1.2.5 பெறவேண்டியவைகள்

தேறுமென மதிப்பிடப்பட்ட பெறுமதிகளில் பெறவேண்டியவைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

#### 1.2.6 குறுந்தவணை முதலீடுகள்

திறைசேரி உண்டியல்களும் ஏனைய முதலீட்டு அழைப்பு வைப்புகளும் கிரயத்தில் பெறுமதியிடப்பட்டுள்ளன.

#### 1.2.7 காசும் காசிற்குச் சமமானவைகளும்

காசும் காசிற்குச் சமமானவைகளும் 2011.12.31 இல் உள்ளவாறான கையிலுள்ள காசையும் வங்கியிலுள்ள காசையும் உள்ளடக்குகின்றன.

#### 1.2.8 காசுப்பாய்ச்சல்

காசுப்பாய்ச்சல் கூற்று நேரில் முறையைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டுள்ளது.

#### 1.2.9 அன்னிய செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள்

கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்ந்த நாளில் நிலவிய நாணயமாற்று விகிதத்தில் அன்னிய செலாவணிக் கொடுக்கல் வாங்கல்கள் கணிப்பிடப்படுகின்றன. அன்னிய செலாவணியில் குறிப்பிடப்பட்ட நாணயச் சொத்துக்கள் ஐந்தொகைத்திகதியில் நிலவும் நாணயமாற்று விகிதத்தின் இலங்கை ரூபாக்களுக்கு மாற்றப்படுகின்றன.

### 1.3 ஊழியர் நலன்கள்

#### 1.3.1 பணிக்கொடைக்கான ஏற்பாடு

இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இற்கு அமைவாகச் சகல ஊழியர்களுக்கும் சேவையின் தொடக்க ஆண்டிலிருந்து செலுத்தப்பட வேண்டிய இளைப்பாறற் பணிக்கொடைக்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கப் பணிக்கொடை அதிகாரச் சட்டத்தின் கீழ் ஊழியர் ஒருவருக்கான பொறுப்பானது 5 ஆண்டுக் காலம் தொடர்ச்சியான சேவையைப் பூர்த்தி செய்ததன் பின்னர் மாத்திரமே எழுகின்றது. இப் பொறுப்பிற்கு வெளியிலிருந்து நிதியளிக்கப்படாததுடன் இது உள்ளபடியாகவும் பெறமதியிடப்படுவதில்லை.

2011.12.31 இல் உள்ளவாறான மொத்தப் பொறுப்பு ரூபா 40,441,292.63 ஆகக் காணப்பட்டது. ரூபா 6,182,885.87 தொகை நடைமுறையாண்டின் இலாப நட்டக் கணக்கிற்குச் சாட்டப்பட்டுள்ளது.

### 1.3.2 வரையறுத்து பங்களிப்புச் செய்யப்பட்ட திட்டங்கள்

சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களுக்கான பங்களிப்புகளுக்கான கடப்பாடுகள் வருமானக் கூற்றில் செலவிடப்பட்ட ஓர் செலவினமாகக் கூறப்பட்டுள்ளன. நடப்பாண்டின் போது அதிகாரசபை ஊழியர் சேமலாப நிதியத்திற்காகவும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்காகவும் முறையே ரூபா 11,824,953.08 தொகையையும் ரூபா 2,231,199.66 தொகையையும் செலவிட்டுள்ளது.

## 1.4 பொறுப்புகள்

### 1.4.1 நடைமுறைப் பொறுப்புகள்

நடைமுறைப் பொறுப்புகள் என்பவை கோரப்படும் போது அல்லது ஐந்தொகைத் திகதியிலிருந்து ஓராண்டிற்குள் கொடுப்பனவைச் செலுத்த வேண்டியனவாகும். நடைமுறையல்லாத பொறுப்புகள் என்பவை ஐந்தொகைத் திகதியில் இருந்து ஓராண்டு காலத்தில் அல்லது அதற்கு மேற்பட்ட காலப் பகுதியில் கொடுப்பனவைச் செய்ய வேண்டியவைகளாகும்.

### 1.4.2 ஏற்பாடு மற்றும் பெறுமானத் தேய்வு

மீளாய்வாண்டிற்கான மொத்த ஏற்பாடுகள் வருமானச் செலவினக் கணக்கில் வேறாக வெளிக்காட்டப்பட்டுள்ளதுடன் கடந்த ஆண்டின் தாக்கங்கள் நிதிக்கூற்றில் வேறாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்களை வாசிக்க விரும்புபவர்களுக்கு மேலும் அர்த்தமுள்ள விளக்கத்தை அளிப்பதற்கு நிதிக்கூற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

### 1.4.3 பறிமுதல் செய்யப்பட்ட இரத்தினக்கல் அகழ்தல் வைப்புகள்

பறிமுதல் செய்யப்பட்ட இரத்தினக்கல் அகழ்தல் வைப்புகள், 2000 ஆம் ஆண்டிலிருந்து இரத்தினக்கல் காணி புனரமைப்பு ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. மீளாய்வாண்டின் போது பறிமுதல் செய்யப்பட்ட இரத்தினக்கல் அகழ்தல் வைப்புகள் கடந்த ஆண்டைத் தொடர்ந்து வரும் வருமானமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.4.4 இரத்தினக்கல் அகழ்தல் மற்றும் பிற வைப்புகள்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீளளிக்கப்படத்தக்க இரத்தினக்கல் அகழ்வு மற்றும் ஏனைய வைப்புகளின் ரூபா 244,486,464.23 தொகையாக இருந்தது.

ரூபா 3,710,000.00 தொகையான கோரப்படாத இரத்தினக்கல் அகழ்வு வைப்புக்கள் ஆண்டின் போது வருமானமாகக் கருதப்பட்டுள்ளன.

### 1.4.5 ஆய்வுகூட நிதியம்

இரத்தினக்கல் ஆபரண பரீட்சிப்பு மற்றும் சான்றுறுதிப்படுத்தலுக்காக சர்வதேச மட்டத்தில் ஓர் ஆய்வுகூடத்தை ஸ்தாபிப்பதற்காக இலங்கை இரத்தினக்கல் ஆபரண அமைப்பு (எஸ்எல்ஜீஜேஏ) லங்கா ஜெமொலொஜிகல் (தனியார்) வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றை உருவாக்கியது. 2001 சனவரி முதல் 2005 யூன் வரையான காலப்பகுதியின் போது மேற்குறித்த ஆய்வுகூட ஸ்தாபிப்பிற்காக அவர்களது பங்களிப்புத் தொகையான ரூபா 92,498,578.69 ஆனது 2009 ஆம் ஆண்டின் போது அமைச்சரவை அங்கீகாரத்துடன் லங்கா ஜெமொலொஜிகல் (தனியார்) வரையறுக்கப்பட்ட கம்பனிக்கு மாற்றப்பட்டது.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை மற்றும் லங்கா ஜெமொலொஜிகல் (தனியார்) வரையறுக்கப்பட்ட கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 102,970,217.00 ஆகக் காணப்பட்டது.

### 1.4.6 வரிவிதிப்பு

வரிவிதிப்பு ஆண்டிற்கான வருமானச் சீராக்கலின் அடிப்படையிலேயே நடைமுறை வரிவிதிப்பிற்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. ரூபா 5,000,000 தொகை 2010.12.31 இல் உள்ளவாறான வரிக்கான ஏற்பாடாகக் காண்பிக்கப்பட்டுள்ளது.

### 1.4.7 ஐந்தொகைத் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் நிகழ்வுகளின் பொருண்மை கவனத்திற் கொள்ளப்பட்டு கணக்குகளில் சீராக்கல்கள் செய்யப்பட்டுள்ளன.

## 1.5 வருமானமும் செலவினமும்

### 1.5.1 வருமானத்தின் ஏற்பு

**(i)** கிரமமான வருமானம் கொடுப்பனவின் பெறுவனவின் போதும் முற்பணப் பெறுவனவானது முற்பணப் பெறுவனவுக் கணக்கிலும் செலவு வைக்கப்படுகின்றது. வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது.

**(ii)** உலக வர்த்தக மையத்தின் செயற்பாடுகளிலிருந்து பெறப்படும் வாடகை வருமானமும் பிற வருமானமும் அதன் மீது எதிரீடு செய்யப்பட்ட வருமானமாகக் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாகப் புறம்பான மூலங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பெறவேண்டிய வாடகை அட்டுறு அடிப்படையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

(**iii**) பெறுமதியிடல் அலுவலகத்தின் இலாப நட்டங்கள் ரூபா 1,982,254.92 தொகையான பெறுமதியடல் முத்திரை வருமானத்தில் இருந்து நேரடி பொருட்கள் மற்றும் பராமரிப்புக் கிரயத்தொகையான ரூபா 225,490.92 கழிக்கப்பட்டதை அடுத்து பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

(**iv**) ஏற்றுமதி தரகுப் பணம் கணிப்பிடப்படுகையில் 2011 சனவரி வரையான ஏற்றுமதி வருமானங்கள் கணக்கிற்கு எடுக்கப்பட்டுள்ளன.

1.5.2 செலவினம்

(அ) வினைத்திறமை நிலையில் மூலதனம் சொத்துக்களைப் பேணிவைத்திருப்பதற்காக இவ் அதிகாரசபையை நடாத்துவதில் செய்யப்பட்ட சகல செலவினங்களும் இவ்வாண்டிற்கான வருமானத்திற்குச் சாட்டுதல் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இவ் அதிகாரசபையின் உழைப்புத் திறனை அதிகரிப்பதன் பொருட்டு நிரந்தரத் தன்மை வாய்ந்த சொத்துக்களின் கொள்வனவு நீடிப்பிற்கு அல்லது மேம்பாட்டிற்கு செய்யப்பட்ட சகல செலவினங்களும் மூலதனச் செலவினமாகக் கருதப்பட்டுள்ளன.

1.5.3 நிகழத்தக்கவைகள்

பாதகமான சட்டத் தீர்வுகள் அல்லது வேறேதேனும் கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக பொருண்மையான இழப்புகள் எதுவும் எதிர்பார்க்கப்படவில்லை.

ரீஎம்/ஜே/என்ஜீஜேஏ/எப்ஏ/2011 2012 யூலை 31

தலைவர்,

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, மூலதன மாற்றக் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 21 (2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2012 ஏப்ரல் 23 ஆந் திகதி அதிகாரசபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 3

ரூபா 3,710,000 பெறுமதியான மீளப்பெற்றப்படாத பிணை வைப்புத் தொகையினை ஆண்டின் வருமானத்திற்கு எடுத்துக்கொண்டமை கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இல. 18

அதிகாரசபையிடம் உள்ள காட்சிப்படுத்தல் இரத்திணக்கல் இருப்பு 1996 ஆம் ஆண்டின் பின்னர் மீளவிலை மதிக்கப்பட்டு கணக்குகளில் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ஆம் அண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த இறுதிக் கணக்குகளில் 2010 இன் ஜுவல்ஸ் கண்காட்சிக்கான அட்டுறு பிரச்சார செலவினமாக ரூபா 1,956,330 காட்டப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டில் கண்காட்சிக்கான பிரச்சாரச் செலவினத்திற்காக ரூபா 5,306,502 செலவொன்று செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 3,350,172 ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) குருவிட ஹல்பே வீதியினை திருத்தம் செய்வதற்காக ரூபா 1,400,000 இனை வெளிநபர்களிடமிருந்து அறவிட்டு மாணிக்கக்கல் தோண்டுதல் பிணை வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. வீதியின் திருத்தத்திற்காக இத் தொகை மாகாண வீதிகள் அமைச்சிற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறித்த வைப்புக் கணக்கிலிருந்து அகற்றப்படாதிருந்தமை காரணமாக அந்தக் கணக்கு ரூபா 1,400,000 இனாலும் செயற்திட்ட செலவினக் கணக்கு அத்தொகையினாலும் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(இ) வெகுமதி நிதியத்தின் வருமானம் ரூபா 5,082,600 ஆனது பெகோ வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) உலக வர்த்தக மையத்தில் தாபிக்கப்பட்டுள்ள கடை உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய வாடகை வருமானத்திலிருந்து அறவிடப்பட்ட ரூபா 67,924 தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரியானது தேசத்தைக் கட்டியெழுப்புதல் செலவுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) 2010 ஆம் ஆண்டின் ரூபா 1,355,125 உள்நாட்டு காட்சிப்படுத்தல் செலவினத்திற்கான பற்றாக்குறை ஒதுக்கீடு கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டப்பாட்டுக் கணக்குகள்

இறுதிக் கணக்கின் படி புடவைக் கடன் கணக்கு மற்றும் விழா முற்பணக் கணக்குகளில் முறையே ரூபா 396,167 மற்றும் ரூபா 107,982 காணப்பட்ட போதிலும் பட்டோலைகளின் படி முறையே ரூபா 327,667 மற்றும் ரூபா 176,482 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் படி முறையே ரூபா 68,500 மற்றும் ரூபா 68,500 வேறுபாடு காணப்பட்டது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| பிரிவு | விடயம் | பேரேட்டின் படி மீதி | தொடர்புடைய பிரிவின் தகவலின் படி மீதி | வேறுபாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| புள்ளவிவிபரவியல் | தங்கத்தின் அளவினை உறுதிப்படுத்தல் பிரிவின் வருமானம் | 2,662,865 | 2,532,672 | 130,193 |
| புள்ளவிவிபரவியல் | மாணிக்கக்கல் பரிசோதனை வருமானம் | 3,193,075 | 3,140,983 | 52,092 |
| இரத்திணபுரி மாணிக்கக்கல் பரிமாற்று நிலையம் | நிலுவையான வாடகை வருமானம் | 2,789,500 | 3,304,500 | 515,000 |

2.2.5 பெறவேண்டிய மற்றும் செலத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 3,407,494 மொத்தமான 5 கடன்கொடுத்தோர் மீதிகள் 5 ஆண்டுகளிற்கும் மேலாக நிலவி வந்திருந்ததுடன் அவற்றை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சில்லறைக் கடன்பட்டோர் மீதியில் 5 வருடங்களைத் தாண்டியிருந்த ரூபா 33,844 மீதியும் 3 தொடக்கம் 4 ஆண்டுகள் பழமைவாய்ந்த ரூபா 401,595 மீயொன்றும் காணப்பட்டதுடன் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) கடன்பட்டோர் மீதியில் திருப்பி அனுப்பப்பட்டிருந்த ரூபா 314,554 பெறுமதியான 31 காசோலைகள் காணப்பட்டதுடன் அதில் ரூபா 103,552 பெறுமதியான 13 காசோலைகள் 3 தொடக்கம் 8 ஆண்டுகள் வரையான காலம் பழமைவாந்தவையான பேதிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாணிக்கக் கல் மற்றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்திடமிருந்து பெறவேண்டிய ரூபா 9,786,537 தொகையில் 5 வருடங்களிற்கும் மேல் பழமைவாய்ந்த ரூபா 6,756,089 மீதியொன்றும் காணப்பட்டதுடன் 2 தொடக்கம் 5 ஆண்டுகள் வரை பழமை வாய்ந்த மீதி ரூபா 3,030,448 ஆகும்.

(உ) கடன்பட்டோர் மீதியில் உள்ள ரூபா 478,044 விசேட முற்பண மீதியில் 3 தொடக்கம் 4 ஆண்டுகள் வரை பழமை வாய்ந்த ரூபா 31,550 மீதியும் 2 தொடக்கம் 3 ஆண்டுகள் வரை பழமை வாய்ந்த ரூபா 139,401 மீதியும் காணப்பட்டது.

(ஊ) உலக வர்த்தக மையத்தில் தாபிக்கப்பட்டிருந்த வியாபாரத் தளங்களை வாடகைக்கு வழங்கியமையால் 2008 தொடக்கம் 2010 வரையான காலத்திற்காக பெறப்பட

வேண்டிய ரூபா 1,404,560 மொத்த தொகையினை உப குத்தகைக் காரர்களிடமிருந்து அதிகாரசபையினால் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(எ) இரத்திணபுரி மாணிக்கக்கல் பரிமாற்று நிலையத்தில் காணப்படுகின்ற 7 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள தொகை ரூபா 1,542,500 ஆகும்.

2.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) அரசாங்க கொள்வனவு வழகாட்டல்கள் கையேட்டின் படி செயற்படாதிருந்த சந்தர்ப்பங்கள் | |
| (i) 8.9.1 (அ) ஆம் பந்தியின் படி முறையான ஒப்பந்த உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்படாமை | (அ) பரடைஸ்வத்த (ஒளிபரப்புக் கூட்டுத்தாபன பங்கு) நிலத்தில் சுரங்கம் தோண்டுதல் நடவடிக்கை காரணமாக வயல் காணிகளில் சகதிகள் குவிதல் தொடர்பில் மீள்சுழற்சி நடவடிக்கைகளிற்காக கமநல சேவைகள் திணைக்களத்திற்கு ரூபா 500,000 வழங்கப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டிருக்க வில்லை. 2012 யூன் 14 அந் திகதி தலைவரினால் அனுப்பப்பட்டிருந்த பதிலின் படி குறித்த மீள்சுழற்சி நடவடிக்கைக்காக விவசாய அமைப்புக்களுடன் உடன்படிக்கை களில் கைச்சாத்திட்டுள்ளமையால் அதிகார சபையுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட முடியாதுள்ளது என கமநல சேவைகள் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |
| | (ஆ) மேற்படி (அ) இல் குறிப்பிடப்பட்ட காணியில் சுரங்கக் குழிகளை மூடுதல், சகதிகளை வடிகட்டும் முறைமையைத் தயாரித்தல் மற்றும் காணியினைச் சூழவுள்ள வீடுகளிற்குச் செல்லும் நடை பாதைகளை செப்பனிடுவதற்கான மதிப்பீட்டுக் கிரயம் ரூபா |

1,408,000 ஆனதுடன் இப்பணிகளைச் செய்வதற்காக கமநல சேவைகள் திணைக்களத் துடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்க வில்லை.

(**ii**) 5.4.4 ஆம் பந்தியின் படி முற்பணங்களைச் செலுத்துகையில் 20% உச்ச அளவில் செலுத்துதல்

கணனி பதிவேட்டினை அங்கீகரித்தல் முறைமையினை மேம்படுத்துவதற்காக இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு 2011 ஏப்ரல் 04 ஆந் திகதி முற்பணமாக 50% அல்லது ரூபா 277,500 செலுத்தப்பட்டிருந்தது.

(**iii**) 4.3 ஆம் பந்தி

அதிகாரசபையின் கீழ் மாடியிலிருந்து இரண்டாம் மாடி வரை கழிவறை முறைமை மற்றும் நீர் ஒழுக்கினை சீர்படுத்துகையில் மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2011 யூன் 14 அந் திகதி தலைவரினால் அனுப்பப்பட்டிருந்த பதிலின் படி இதனை விரைவாக செப்பணிட வேண்டியிருந்ததனால் மொத்தக் கிரய மதிப்பீடொன்றைத் தயாரிக்காது பதிவு செய்யப்பட்ட கட்டிட நிர்மாண நிறுவனங்கள் சிலவற்றிடமிருந்து விலைமனுக்கோரலினை மேற்கொண்டு செய்யப்படட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2000 ஒகஸ்ட் 31 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப் பட்ட இரத்தினக்கல் அகழ்தல் உரிமை தொடர்பி லான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் அடங்கிய அறிக்கை 6.5 ஆம் பந்தி

அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளின் மொத்த ஏலமிடல் வருமானமும் அதிகாரசபைக்குரியது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஹசலக வெல்கங்கவாடிய அரசாங்க காணிக்காக மத்திய மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்திற்கு ரூபா 872,606 தொகையைச் செலுத்துவதற்கு ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ் ஏலமிடல் காணிகளில் மிக அதிகளவில் அனுமதியின்றி அகழ்வுகள் இடம் பெறுவதால் ஏலமிடுவதற்கு விடுவித்துத் தருமாறு அனேக சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடப்பட்டிருந்த போதிலும் அந்த நிறுவனத்தினால் பல்வேறு நிபந்தனைகளும் முன்வைக்கப்பட்டு அதற்கான சந்தர்ப்பத்தை

வழங்குவதிலிருந்து தவிர்த்துக் கொண்டிருந்தது. அதன் காரணமாக அனுமதியற்ற அகழ்வுகளால் ஏற்படுகின்ற சுற்றாடல் பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்வதற்காகவும் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலும் அந் நிறுவனத்திற்கு குறித்த விகிதாசாரமொன்றை செலுத்துவதற்கு இணங்கி காணியை விடுவித்து ஏலமிட்டதாக தலைவரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை 5 ஆம் பந்தி

2009 இலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையிலான கூட்டுத் திட்டத்தில் உண்மையானதும் அடையக்கூடியதுமான நோக்கங்கள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதுடன் பாதீட்டினால் அந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு ஏற்பாடுகளையும் செய்தல் வேண்டும். இருப்பினும் நிறுவகத்தின் பாதீட்டினால் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் நோக்கங் கள் வெளிக்காட்டப்படாத சந்தர்ப்பங்களைக் காண முடிந்ததுடன் அவற்றில் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

அதற்கிணங்க கூட்டிணைந்த திட்டத்திலுள்ள குறிக்கோள்களும் நோக்கங்களும் உண்மை யில் அடைந்து கொள்ளக்கூடிய மட்டத்தில் அவை இல்லை என்பது வெளிப்படுத்தப் பட்டது. உதாரணமாக:-

**i.** மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரணத் தொழிலின் தேசிய திட்டமொன்றை உருவாக்குதல்.

**ii.** புள்ளிவிபரமெடுத்தல் மூலம் அதன் பெறுபேறுகளை மேம்படுத்தல்

**iii.** சட்டரீதியற்ற மாணிக்கக்கல் அகழ்வுகளை சுற்றிவளைப்பதற்காக விசேட படையொன்றை ஏற்படுத்துதல்.

**iv.** மானிக்கக்கற்களை பரிசோதித்து

வழங்கப்படுகின்ற சான்றிதழ்களின் தரத்தினை முன்னேற்றுவதற்காக Spectometer இனை கொள்வனவு செய்தல்.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் வரிக்கு முன்னர் ரூபா 8,177,976 தேறிய இலாபமொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய நட்டம் ரூபா 32,966,486 ஆகும். காணிகளை ஏலமிடல் வருமானம் ரூபா 11,331,900 ஆல் அதிகரித்திருந்தமை, தாபனச் செலவினம் ரூபா 11,374,973 ஆலும் மேம்படுத்தல் செலவினம் ரூபா 23,577,186 ஆலும் குறைவடைந்திருந்தமை மிகை ஏற்படுவதற்கு முக்கியமாக செல்வாக்கு செலுத்தியிருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் அடங்கியிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளில் அதிகாரசபையின் இலாபத் தன்மை பின்வருமாறு காணப்பட்டது.

| | **2007** | **2008** | **2009** | **2010** | **2011** |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வருமானம் | 215,730,616 | 258,179,893 | 220,671,589 | 228,963,191 | 249,179,325 |
| செலவினம் | 232,277,006 | 228,772,163 | 233,705,664 | 261,929,677 | 241,001,350 |
| வரிக்கு முன்னர் இலாபம்/(நட்டம்) | (16,546,390) | 29,407,730 | (13,034,075) | (32,966,486) | 8,177,975 |

இதன் படி முன்னைய பல ஆண்டகளிலிருந்து அதிகாரசபையின் இலாபத்தன்மை குறிப்பிடத்தக்களவில் ஏற்றத்தாழ்விற்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டடன.

(அ) மானிக்கக்கல் காணிகளை ஏலமிடல்

2011 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் படி அரசாங்கத்திற்கும் காணி மறுசீரமைத்தல் ஆணைக்குழுவிற்கும் சொந்தமான காணிகளை ஏலமிடுவதன் மூலம் ரூபா 65,500,000 வருமானம்

எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையினால் உழைக்கப்பட்டிருந்த வருமானம் ரூபா 28,837,872 ஆகும். அதன் படி எதிர்பார்த்த இலக்கினை அடைதல் 44% அளவு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) மாணிக்கக்கற்கள் மற்றும் தங்க ஆபரண ஏற்றுமதிகள்
பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அதிகாரசபையினால் மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரணத் துறையில் வெளிநாட்டு மேம்படுத்தலிற்காக வெளிநாட்டு மேம்படுத்தல்களில் பங்குபற்றுவதுடன் அதற்காகவும் இலங்கை மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரண சங்கத்தினூடாக வெளிநாட்டு பிரச்சாரங்களிற்காகவும் வருடந்தோறும் பணம் செலவிடப்படுகிறது. அதிகாரசபையினால் சான்றுறுதிப்படுத்தப்பட்டு விற்பனைக்காக அனுப்பப்பட்ட ரூபா 26,601,128 பெறுமதியான மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரணங்கள் அனைத்தும் விற்பனை செய்யப்படாது மீள அனுப்பி வைக்கப்பட்டடிருந்த 7 சந்தர்ப்பங்கள் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்டது.

(ii) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளிற்கான மேம்படுத்தல் செலவினமும் அதில் உள்ளடங்கியிருந்த வெளிநாட்டு கண்காட்சிகளிற்காக செய்யப்பட்டிருந்த செலவினங்களும் பின்வருமாறு காணப்பட்டன.

| ஆண்டு | மேம்படுத்தல் செலவினம் | வெளிநாட்டு கண்காட்சி செலவினம் | சதவீதமாக |
|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % |
| 2007 | 38.130 | 15.705 | 41.18 |
| 2008 | 34.776 | 14.366 | 41.31 |
| 2009 | 33.264 | 13.385 | 40.23 |
| 2010 | 49.028 | 1.406 | 2.86 |
| 2011 | 25.451 | 8.355 | 32.82 |

(iii) ஏற்றுமதி செய்யப்படுகின்ற இருப்புக்கள் அனைத்தும் திருப்பி அனுப்பி வைக்கப்படுகின்றமைக்கான காரணம் என்னவென்றும் வெளிநாட்டு மேம்படுத்தல்களிற்காக வருடந்தோறும் செலவிடப்படுகின்ற பணத்திற்கு உரிய பயன் கிடைத்துள்ளதா என்றும் கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) தங்கத்தின் அளவினை உறுதிப்படுத்தும் பிரிவு
பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2011 ஆம் ஆண்டில் மாணிக்கக்கல் ஆராய்ச்சி வருமானம், முடிவுக் கணக்கின் படி ரூபா 3,295,575 ஆக காணப்பட்டதுடன் அக்காலத்தில் பதவியணிக் கிரயம் மற்றும் உபகரணங்களின்

தேய்விற்காக முறையே ரூபா 4,353,322 மற்றும் ரூபா 787,369 என்ற வகையில் மொத்தம் ரூபா 5,140,691 ஆகக் காணப்பட்டது. அதன் படி 2011 இன் மாணிக்கக்கல் ஆராய்ச்சி வருமானத்தினை மிகைத்த செலவினம் ரூபா 1,845,116 அல்லது 56% ஆகும்.

(**ii**) 2011 ஆம் ஆண்டின் தங்க ஆபரண ஆராய்ச்சி வருமானம் ரூபா 1,523,158 ஆகக் காணப்பட்டதுடன் அக்காலத்திற்கான பதவியணிக் கிரயம் மற்றும் பெறுமானத்தேய்வு முறையே ரூபா 3,491,797 மற்றும் ரூபா 1,224,403 ஆகும். அதன் படி வருமானத்தினை மிகைத்த செலவினம் ரூபா 3,193,042 அல்லது 209% ஆகும்.

2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் சான்றிதழ்களை வழங்குதலின் செயன்முன்னேற்றம் ஏறத்தாழ 3% இனால் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) கெவுடா ஏற்றுமதி

கெவுடா ஏற்றுமதியினை பூச்சிய மட்டம் வரைக்கும் குறைப்பதே நிறுவனத்தின் நோக்கமான போதிலும் 2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் கெவுடா ஏற்றுமதி முறையே 26.74% இனாலும் 36.21% இனாலும் அதிகரித்திருந்தது. அதனைக் குறைப்பதற்காக பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதியின் பால் அதிக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(உ) இயந்திரங்களைப் பயன்படுத்தி சுரங்கங்கமறுத்தல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(i)** காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் சுரங்மறுத்தலிற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலத்தின் அளவிற்கும் மேலாக அதிகாரசபையினால் சுரங்கமறுப்பதற்காக அனுமதிவழங்கப்பட்டிருந்த 5 சந்தர்ப்பங்கள் பின்வருமாறு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

ஏதேனுமோர் எல்லைப்குதியில் காணப்படுகின்ற கனியங்களை அகற்றுவதற்கு குறிததுரைக்கப்பட்ட பிரதேசத்திற்கே காணி மறுசீரமைப்பு ஆணையாளர் ஆணைக்குழு பரிந்துரை வழங்குகிறது. அதன் பின்னரும் தொடர்ந்துவரும் வருடங்களிற்கு இவ்வாறு அனுமதி வழங்கப்படுவதுடன் அவ்வாறு அனுமதிக்கப்பட்ட அளவு ஆரம்ப அளவாக இருப்பதில்லை. அதன் படி, அதிகாரசபையினால் சுரங்கமறுப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்ட அளவானது சில ஆண்டுகளின் உரிமைகளின் மொத்தமாகும் என தலைவரினால் அனுப்பப்பட்டிருந்த பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

| கோவை இல. | காணி மறுசீரமைப்பு ஆணையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட அளவு | அதிகாரசபையினால் இடமளிக்கப்பட்ட அளவு |
|---|---|---|
| | | சதுர அடி |
| 17/2/1/3/71769 | 15 பேர்சர்ஸ் (4005 சதுர அடி) | 9,888 |
| 17/2/1/1/3/65898 | 1 பேர்சர்ஸ் (267 சதுர அடி) | 1,000 |
| 17/2/1/1/3/66971 | 1 பேர்சர்ஸ் (267 சதுர அடி) | 15,000 |
| 17/2/1/1/3/63245 | 20 பேர்சர்ஸ் (5340 சதுர அடி) | 12,213 |
| 17/2/1/3/72500 | 20 பேர்சர்ஸ் இல் (267 சதுர அடி) | 16,408 |

**(ii)** 5/41/P59380 ஆம் இலக்க அனுமதிப்பத்திர விநியோக கோவையின் பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(iii)** 2007 செப்தம்பர் 14 ஆந் திகதி பணியில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்ட வெளிக்களப் பரிசோதனையில் 12,000 சதுர அடி அளவு கொண்ட சுரங்கமொன்றை வெட்டுதல் மற்றும் நீரோடைக்கு சேதத்ததை ஏற்படுத்தல் தொடர்பாக அறிவக்கப்பட்டிருந்ததுடன் 121(3) ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி ரூபா 660,000 இணக்கக் கட்டணமொன்றும் சுரங்கத்தை மூடிவிடுதல் அல்லது மேலதிக பிணை வைப்பொன்றை அறவிடுதல் வேண்டுமாயினும் ரூபா 10,000 இணக்கக் கட்டணமொன்று மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**(iv)** இணக்கக் கட்டணத்தினைத் தீர்மானிக்கையில் 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 52 ஆம் பிரிவில் வரம்புகள் விதிக்கப்பட்டிருந்த போதிலும் பணிப்புரைகளை வழங்குதல் மற்றும் விதிகளை தயாரிக்கும் அதிகாரம் அதிகாரசபைக்கு உள்ளமையால் 17 வருடங்கள் பழமைவாய்ந்த இவ் விதிகளில் தங்கியிருக்காது நடைமுறைத் தொழில் நிலைமையினைக் கருத்திற்கொண்டு அதன் முன்னேற்றத்தைக் கருதி அதிகாரசபை நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என சுரங்கமகழ்தல் தொடர்பில் மேற்கொண்ட பரிசோதனைகளிலிருந்து தெரியவந்தது.

**(v)** அனுமதிப்பத்திரங்களில் குறிப்பிடப்பட்டிருந்த நிபந்தனைகளை மீறியமை, சட்ட விரோதமாக சுரங்கமறுத்தல் போன்றன சம்பந்தமாக 5 ஆண்டுகளிற்கும் மேல் பழமைவாய்ந்த அதிகாரசபையின் சுற்றறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு இணக்கப்பாட்டிற்கு வருதல் இடம்பெற்றுவருகின்ற போதிலும் அவ்வேளையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் நிபந்தனைகளிலுள்ள நலிவுத்தன்மை காரணமாக தொடர்ச்சியாக அக்குற்றங்கள் புரியப்படுவதும் அதன் விளைவாக பாரிய சுற்றாடல் தீங்குகள் இடம்பெறுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. இது தொடர்பில் செயற்படுவதற்கு தற்போது விசேட பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ளதாக தலைவரினால் இதற்கான பதிலில் அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஊ) வெளிநாட்டு வியாபாரக் கண்காட்சிகள்

**(i)** 1993 இன் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 14(1) இ பிரிவின் படி இலங்கைக்கு உள்ளோ அல்லது வெளியிலோ மாணிக்கக்கற்கள் மற்றும் ஆபரணங்களிற்கான சந்தைகளினைப் பயன்படுத்துதல் மற்றும் மாணிக்கக்கற்கள் மற்றும் ஆபரணங்களிற்காக உலக சந்தையில் கேள்வியினை மேம்படுத்துதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாயினும், அதிகாரசபையினால் 2009, 2010, 2011 ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டு சந்தைக் கண்காட்சிகளை நடாத்துதல் பின்வருமாறு காணப்பட்டதுடன் அவை ஒருசில நாடுகளிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் இந்த நோக்கம் அடையப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(ii)**

| நாடு | நடாத்தப்பட்ட கண்காட்சிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | 2011 | 2010 | 2009 |
| சீனா | 5 | 4 | 3 |
| சிங்கப்பூர் | 1 | 1 | 1 |
| இந்தியா | - | - | 1 |
| யப்பான் | - | - | 1 |
| அமெரிக்கா | - | - | 1 |
| | 6 | 5 | 7 |

**(iii)** செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி மீளாய்வாண்டில் 12 வெளிநாட்டு கண்காட்சிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 6 கண்காட்சிகள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

**(iv)** மீளாய்வாண்டில் 6 வெளிநாட்டு கண்காட்சிகளை நடாத்துவதற்காக ரூபா 29,576,767 செலவிடப்பட்டிருந்ததுடன் கண்காட்சிகளில் பங்கேற்றோரி டமிருந்து ரூபா 20,204,861 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தரப்படுத்தல் இரசாயன ஆய்வுகூடமொன்றை தாபிப்பதற்காக 2001 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரை ஏற்றுமதி வருமானத்தில் அறவிடப்பட்டிருந்த ரூபா 99,545,573 தொகையிலிருந்து நிதியமொன்று தாபிக்கப்பட்டிருந்தது. இந் நிதியத்திலிருந்து ரூபா 7,046,995 தொகையொன்று தரச் சான்றிதழ்களை விநியோகிக்கும் வசதிகளை வழங்குவதற்காக இணங்கியிருந்த அமெரிக்க இரத்தினக்கல் வர்த்தகக் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் எப்பிரதிபலனும் கிடைத்திருக்கவில்லை. ஆய்வுகூடத்தினை நிர்மாணிப்பதற்காக 2009 ஏப்ரல் வரை தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன் 2009 ஏப்ரல் மாதத்தில் அந் நிதியத்தில் எஞ்சியிருந்த ரூபா 92,498,578 தொகை அமைச்சரவை அங்கீகாரத்தின் பேரில் தனியார் நிறுவனமொன்றுக்கு அப் பணியினை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்டிருந்தது. 2011 மார்ச் 31 இல் அந்த நிதியத்தின் மீதி ரூபா 102,970,217 ஆக காணப்பட்டதுடன் அந்நிதியிலிருந்து 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில்

கணக்காய்வுக் கட்டணம் மற்றும் நானாவித செலவினங்களை மேற்கொள்வதற்காக ரூபா 621,609 செலவிடப்பட்டிருந்தது. ஆய்வுகூடத்தினை தாபிப்பதற்காக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2011 மார்ச் 31 ஆந் திகதி வரை கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கையும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) மாணிக்கக்கல் அகழ்வு நலனோம்பல் நிதியம்

சுரங்கத் தொழிலில் ஈடுபடுகின்ற சகலரிற்கும் வரிச்சலுகையை பெற்றுக்கொடுப்பதற்காக சட்டரீதியாக அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொண்ட ஒருவரினால் அதன்மூலம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற மாணிக்கக்கற்களை அதிகாரசபையின் அனுமதிப்பத்திரத்தின் கீழ் ஏலமிடலோ அல்லது விற்பனையோ செய்தல் வேண்டும். அதன்மூலம் கிடைக்கின்ற மொத்த வருமானத்தில் 1% பெறுமதியான தொகையினை சுரங்கத் தொழிலில் ஈடுபடுகின்ற சகலரினதும் சேமநலனிற்காக தாபிக்கப்பட்டுள்ள அதிகாரசபையின் நிதியத்திற்கு செலவு வைத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, 1999 இலிருந்து 2008 வரையான காலத்தில் அவ்வாறு சேகரிக்கப்பட்ட தொகைகள் அதிகாரசபையின் மாணிக்கக்கல் அகழ்வு நலனோம்பல் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 இல் அந்நிதியத்தில் ரூபா 27,356,498 மீதியொன்று காணப்பட்டது. 2008 தொடக்கம் இந்நிதியத்திற்கு செலவு வைத்தல் நிறுத்தப்பட்டிருந்ததுடன் இது வரைக்கும் சுரங்கத் தொழிலில் ஈடுபடுகின்றோர்களது நலனிற்காக இந்நிதியம் செயற்படுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்படவில்லை.

(இ) தங்க ஆபரண அபிவிருத்தி நிதியம்

ஆபரண தொழிலில் ஈடுபட்டிருக்கின்றோர்களது அபிவிருத்தி கருதி ஆபரண விற்பனையில் ஈடுபட்டுள்ளோர்களிடமிருந்து 2008 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட்டிருந்த தொகையிலிருந்து ஆபரண அபிவிருத்தி நிதியம் தாபிக்கப்பட்டிருந்தது. 2011 திசெம்பர் 31 இல் அந்நிதியத்தில் ரூபா 17,420,083 செலவில் காணப்பட்டதுடன் தொழிலின் அபிவிருத்திக்காக மீளாய்வாண்டில் இந்நிதி பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை.

(ஈ) வாகனப் பாவனை

அதிகாரசபையினால் வாகனமொன்றுக்கு ரூபா 26,000 வீதம் 7 வாகனங்களிற்காக GPRS/GPS Vehicle Tracking System பொருத்தப்பட்டிருந்ததுடன் அவற்றை செயற்படுத்துகையில் தாங்கிகளின் பல்லினத் தன்மைக்கேற்ப செயற்படுத்தப்படாதிருந்தமை காரணமாக முறைமை அகற்றப்பட்டிருந்தது. தொழில்நுட்ப சபையினால் நடைமுறைச் சாத்தியத்தினைக் கருத்திற்கொள்ளாது தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் இவ்வாறான நிலைக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 4.3 பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலையான சொத்துக்களின் கீழ் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் தொடர்பாக 2001 இலிருந்து 2005 வரையான காலத்தில் மெனிக் புர நிர்மாணப் பணிகளிற்காக ரூபா 1,500,441 செலவிடப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக எவ்வித பயனுள்ள முன்னேற்ற நடவடிக்கைகளும் கடந்த 7 ஆண்டுகளில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் தற்போது இந்த மெனிக் புரத்தின் நிர்மாண வேலைகள் கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) இரத்தினபுரி பிரதேச அலுவலகத்தில் மாணிக்கக்கல் பரிசோதனைக்காக காணப்படுகின்ற ஆய்வுகூடத்தில் பின்வரும் உபகரணங்கள் நீண்ட காலமாக பயன்பாடற்ற நிலையில் வைத்திருக்கப்பட்டிருந்தன.

i. Ultraviolet machine

ii. Spectroscope machine

iii. Fribolic machine

(இ) சம்பத் வங்கியின் இணைய தளத்தினூடாக செய்யப்படுகின்ற கொடுப்பனவுகளிற்காக நடாத்தப்பட்டு வருகின்ற கணக்கில் ரூபா 37,119.25 மீதியொன்று 2007 ஆம் ஆண்டிலிருந்து பயன்பாடற்ற நிலையில் வைத்திருக்கப்பட்டிருந்தது.

## 4.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ஜுவல்ஸ் கண்காட்சிக்காக செய்யப்பட்டிருந்த விளம்பர செலவினம் ரூபா 5,495,823 ஆக காணப்பட்டதுடன் அது மொத்த விளம்பர செலவினத்தில் ஏறத்தாழ 20% ஆன பெறுமதியொன்றைக் கொண்டிருந்தது. டிக்கெட்டுக்கள் விற்பனை, வியாபாரக் கூடங்கள் மற்றும் புவிச்சரிதவியல் சுரங்கங்கள் பணியகத்தின் பங்களிப்புகள் அடங்கலாக ரூபா 5,710,333 இக் கண்காட்சியிலிருந்து கிடைத்திருந்ததுடன் தேறிய செலவினம் ரூபா 22,086,972 ஆகும். அதிகாரசபையின் செயற்பாடுகளிலிருந்தான நிதி நிலைமை மற்றும் காணப்படுகின்ற வளங்கள் தொடர்பில் கருத்திற்கொள்கையில் இவ்வாறான அதிக செலவினை மேற்கொண்டு துறையின் முன்னேற்றத்திற்காக செய்யப்பட்ட இக்கண்காட்சியிக்கான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நபர்களின் பங்கேற்றல் எதிர்பார்க்கப்பட்ட அளவில் 26% ஆன குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) பிரதேச அலுவலகங்களினால் வங்கிக் கணக்குகளில் பேணிவரப்பட வேண்டிய உச்ச வங்கி மீதியாக விதிக்கப்பட்டுள்ள தொகைக்கும் மேலாக ரூபா 4,862,759 மிகையான மீதியொன்று பேணிவரப்பட்டிருந்தது.

## 4.5 இனங்காணப்பட்ட இழப்புக்கள்

பெலிதெனிய கட்டடித்தின் நீர் சிட்டைகளை உரிய தினத்தில் செலுத்தாமை காரணமாக நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டு மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 11,760 தொகையும் கொழும்பு மாநகர சபைக்கு 2008,

2009 ஆம் ஆண்டிற்கான இறைவரியினைச் செலுத்துகையில் பிடியாணைக் கட்டணமாக ரூபா 2,440 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

4.6 ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரசபையின் வளங்கள்

2003 ஜுன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 3.8.9 ஆம் பந்திக்கு முரணாக தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்த மூன்று உத்தியோகத்தர்களிற்காக ரூபா 592,958 உம் 2 வாகனங்களிற்காக ரூபா 337,069 செலவினமும் அமைச்சிற்காக அதிகாரசபையினால் செய்யப்பட்டிருந்தன.

4.7 பதவியணி நிர்வாகம்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) அதிகாரசபைக்கான அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையினை நிரந்தர பதவிகளிற்காக சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் வெற்றிடங்கள் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது.

| | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | |
|---|---|---|---|
| வகை | அங்கீகரித்த எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
| பதவிநிலை | 51 | 36 | 15 |
| பதவிநிலையற்ற | 169 | 91 | 78 |
| சிற்றூழியர் | 52 | 40 | 12 |
| ஓப்பந்த | - | 60 | - |
| சமயாசமய | - | 11 | - |
| | 272 | 238 | 105 |

(ஆ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1(vi) மற்றும் 9.10 ஆம் பந்திகளின் பிரகாரம் பதிற்கடமைக்கான உச்ச காலம் 03 மாதங்களாகும். இருப்பினும் நிறுவனத்தில் நிண்டகாலமாக காணப்பட்டு வருகின்ற பதிற்கடமை/பணிகளை மேற்கொள்ளும் பதவிகளை நிரப்புவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் பதவிகளில் பதிற்கடமை.்.பணிகளை மேற்கொள்வதற்காக 07 உத்தியோகத்தர்களிற்கு 2011 ஆம் ஆண்டில் ரூபா 422,305 செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2006 நவம்பர் 09 ஆந் திகதிய தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் ளேஉஊஊ.்.2.்.43.்.ஊஉடீ1 ஆம் இலக்க கடிதத்தின் படி புதிய சம்பள முறையின் நலன்களை ஊழியர்களிற்கு வழங்குவதற்காக காணப்படுகின்ற ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறை

திருத்தப்பட வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் ஆட்சேர்ப்பு நடைமுறை திருத்தப்பட்டு அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) அங்கீகரிக்கப்பட்ட பதவிகளான பிரதி சிரேஷ்ட விலைமதிப்பாளர்/இரத்தின விஞ்ஞானி (ii) என்ற 2 பதவிகளும் அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்தே வெற்றிடமாக காணப்பட்டன. விலைமதிப்பாளர்/இரத்தின விஞ்ஞானி (கெவுடா) என்ற 2 பதவிகளும் அங்கிகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2006 ஜுன் 13 ஆந் திகதியிலிருந்து அப்பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஊ) அதிகாரசபையின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2011 பெப்ரவரி 14 ஆந் திகதியிலிருந்து வெற்றிடமாக காணப்பட்டதுடன் அதற்காக 2012 ஏப்ரல் வரை ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாட்சி

### 5.1 கூட்டுத் திட்டம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 இன் கூட்டுத்திட்டத்தின் படி செயற்படுத்தப்படாதிருந்த நடவடிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரணத் தொழிலிற்காக தேசியக் கொள்கையொன்றைத் தயாரித்தல்.

(ii) மாணிக்கக் கற்கள் மற்றும் ஆபரணத் தொழிலிற்கான புள்ளவிபரத் திரட்டலொன்றை மேற்கொள்ளல். 2006 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த இப்பணி நிறைவேற்றப்படாமையால் 2009 - 2013 கூட்டுத்திட்டத்திலும் 2011 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் உள்ளடக்கப் பட்டிருந்ததுடன் 2011 திசெம்பர் 31 வரை 2 மாவட்டங்களில் மாத்திரம் புள்ளவிபரமெடுத்தல் நடவடிக்கைகள் முற்றுப்பெற்றிருந்தன.

(iii) தேசிய நூதனசாலையில் மாணிக்கக்கல் மண்டபமொன்றை தாபித்தல்.

(iv) மாணிக்கக்கற்களை பரிசோதித்து வழங்கப்படுகின்ற சான்றிதழின் தரத்தினை முன்னேற்றுவதற்காக FTIR உபகரணத்தினை வழங்குதல்.

(v) ஆபரண தயாரிப்புகளில் சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மாற்றுப் பார்த்தல் மற்றும் சீல் வைத்தல்களை காலி மற்றும் கண்டி கிளைகளில் தாபித்தல்.

(vi) பதவியணி பயிற்சியளித்தலின் கீழ் கணனிமயப்படுத்தப்பட்ட கோவையொன்றை ஏற்படுத்தல். கோவையினை 2012 இல் ஏற்படுத்தவதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தலைவரினால் அனுப்பப்பட்டிருந்த பதிலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) அடையப்பட முடியுமான நோக்கங்களே கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் பாதீட்டின் மூலம் அந்நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக ஏற்பாடுகளை மேற்கொள்தல் வேண்டும். இருந்த போதிலும் நிறுவனத்தின் பாதீட்டினால் செயல்நடவடிக்கைத்திட்டத்தின் நோக்கங்கள் வெளிப்படுத்தப்படாத சந்தர்ப்பங்களை காண முடிந்ததுடன் அதற்கமைய நிறுவன கூட்டுத்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகள் அடையப்பட முடியுமான மட்டத்தில் காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

5.2 உள்ளகக் கணக்காய்வு

2011 பெப்ரவரி 14 ஆந் திகதி தொடக்கம் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாக காணப்பட்டதுடன் அதற்காக கணக்காளர் ஒருவர் பதல்கடமைக்காக நியமிக்கப்பட்டிருந்தார். அங்கீகரித்த ஊழிர்கோப்பில் 2 உதவி உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர்கள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அதற்காக இரண்டு அமைய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

2012 ஜுன் 14 ஆந் திகதி தலைவரினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த பதிலின் படி பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதுடன் ஏனைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டவுடன் நடவடிக்கை எடுக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. தற்போது கணக்காய்வு உதவியாளராக ஒப்பந்த ஊழியர் ஒருவர் இணைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

5.3 கொள்வனவுகள் திட்டம்

அதிகாரசபையினால் கொள்வனவுகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தங்கத்தின் அளவினை நிச்சயிக்கும் பிரிவிற்காக 2011 ஆம் அண்டில் ரூபா 6.57 மில்லியன் ஏற்பாடொன்று வழங்கப்பட்டிருந்த போதிலும், மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் பணியினை செய்வதற்காக ரூபா 6.32 மில்லியன் ஒதுக்கப்பட்டிருப்பினும் அப்பணி கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) சுரங்கங்களை மூடுவதற்காக 2011 ஆம் ஆண்டிற்காக ரூபா 15 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் திசெம்பர் 31 இல் 3 செயற்திட்டங்களிற்காக ரூபா 2,624,920 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய மொத்த ஏற்பாட்டில் 82மூ இற்கு மேற்பட்ட அளவு சேமிப்பாகியிருந்தது.

(இ) சுற்றாடலிற்கு பாதிப்பற்ற மாணிக்கக்கல் அகழ்வுகளை முன்னேற்றுவதற்காக 5 பாசறைகளிற்காக ரூபா 7 மில்லியன் மதிப்பிடப்பட்டிருப்பினும் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வெளிநாட்டு கண்காட்சிக்காக மதிப்பீட்டினைத் தயாரிக்கையில் கண்காட்சிக்காக பங்குபற்றுவோர்களிடமிருந்து கிடைக்கும் வருமானத்தினைக் கருத்திற்கொள்ளாது மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது.

(உ) முத்துக்களை வெட்டும் தொழிலை முன்னேற்றுவதற்காக பயிற்சிப் பாடநெறியொன்றை நடாத்துவதற்காக பயிலுனர்களிற்கு செலுத்துவதற்கு ரூபா 6.75 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 7,500 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ஊ) பாதிடப்பட்ட தரவுகளை அணுகுதல் 25% இலிருந்து 840மூ இற்கு இடைப்பட பெறுமதியை கொண்டிருந்தன. மேற்படி அவதானிப்புக்களின் படி பாதீடு பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

5.5 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளிற்குரிய ஆண்டறிக்கைகள் 2012 ஏப்ரல் வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.6 விசேட புலனாய்வு பணிகளை மேற்கொள்ளல்

அதிகாரசபையில் விசேட புலனாய்வுப் பிரிவொன்று காணப்படாதிருந்ததுடன் அதிகாரசபைக்கு கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை உத்தியோகத்தர் மற்றும் முகாமையாளர் (சட்டம்) இனால் அதன் மீதான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களின் படி எஹலியாகொட 1,2 வலயங்களிலிருந்து மாத்திரம் கிடைத்திருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 22 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 19 இற்கான பரிசோதனை நடவடிக்கைகள் முற்றுப்பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இரத்திணபுரி, நாஉல, மாத்தறை மற்றும் கொழும்பு அலுவலகங்களிற்கு கிடைத்திருந்த முறைப்பாடுகள் தொடர்பில் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு
(ஆ) கொள்வனவுகள்
(இ) முற்பணங்களைச் செலுத்துதல்
(ஈ) தங்கத்தின் அளவை நிச்சயித்தல் மற்றும் விலைமதிப்பீட்டுப் பிரிவின் நடவடிக்கைகள்
(உ) வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல்
(ஊ) அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல்

எச்.ஏ.எஸ் சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி